

Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 1 ஜனவரி - 2007

## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# நன்றி! நன்றி!!

பரலோக தேவனுடைய திட்டத்தின் படி, கடந்த 27.12.2006 புதன்கிழமை

எங்களது மகள் **லாவின் சாரோனுக்கும்**

சகோதரன் **பென்னி மார்ட்டின்** அவர்களுக்கும்

நடந்த திருமணத்தில், கலந்து, சிறப்பித்து, மணமக்களை வாழ்த்தி

ஆசீர்வதித்த கர்த்தருடைய சபையைச் சார்ந்த

ஊழிய பெருமக்களுக்கும், விசுவாசிகள் கூட்டத்தாருக்கும்,

உறவுகளுக்கும், நண்பர்களுக்கும்

எங்களது குடும்பத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை

தெரிவித்துக் கொள்கிறேன்.

-ஆசிரியர்

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. ஆறாவது பட்டமளிப்பு விழா அழைப்பிதழ் ........ 9
3. கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் ........ 11
4. பெண்கள் பகுதி ........ 16
5. வாலிபர் பகுதி ........ 19
6. சிறுவர் பகுதி ........ 23
7. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25
8. சபை கூடிவருவது மிக அவசியமா? ........ 29
9. இரத்த சாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 JANUARY - 2007 Issue - 1


ஆசிரியர் உரை

## "நிறைவான பலன் கிடைப்பதாக"

உலகத்தில் வாழும் எல்லா மனிதர்க்கும் பிடித்தமான சில வார்த்தைகளில் முக்கியமானது "பலன்" என்பது. ஏனெனில், மனிதன் அன்றாடம் படும்பாடுகளுக்கும், முயற்சிகளுக்கும், பிரயாசைகளுக்குமான அடிப்படைக்காரணம் அவைகளின் மூலம் கிடைக்கும் பலன் தான். எல்லா மனிதர்களுமே தங்களுக்குரிய பலனைப் பெற்றுக்கொள்வதற்கு மிகுந்த எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருப்பர். சில நேரங்களில், பலனை எதிர்பார்க்காமல் பாடுபடுகிறேன் என்று சில மனிதர்கள் தம்பட்டம் அடித்தாலும், உண்மையில் அவர்களுக்கும் உள்ளூர ஓர் எதிர்பார்ப்பு இருக்கவே இருக்கும். இக்கருத்துக்கு விதிவிலக்காக மனிதர்களைக் கண்டுபிடிப்பது அரிதிலும் அரிது.

இப்படிப் பொதுவாக எல்லோராலும் எதிர்பார்க்கப்படும் பலன், சிலருக்கு உழைப்பின் மூலம் கிடைக்கும், சிலருக்கு அறிவின் மூலம் கிடைக்கும், சிலருக்குச் செயலின் மூலம் கிடைக்கும், சிலருக்கு தியாகத்தால் கிடைக்கும், இன்னும் சிலருக்குப் பிறர் தயவால் கிடைக்கும். ஆனால் இவைகளில்லாமலும் ஒரு மனிதனுக்குப் பலன் கிடைக்கும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. அது, பரலோகத்தின் தேவனால், அவருக்குப் பயப்படுகிறவர்களுக்குக் கொடுக்கப்படுவது. நான் முன் குறிப்பிட்ட பலன்களுக்கும், தேவனால் கிடைக்கும் பலனுக்கும் பெருத்த வேறுபாடுண்டு. எப்படியெனில், முதலில் சொன்ன பலன் உலகத்திலிருந்து கிடைப்பது. நான் இங்கே சொல்லுவதோ பரத்திலிருந்து கிடைப்பது. அது மாறிப்போகும் மனிதர்களிடமிருந்தும், மனிதர்கள் மூலமும் கிடைப்பது. ஆனால், இதுவோ

மாறாத தேவனிடமிருந்து கிடைப்பது. அது தற்காலிகமானது. இது நிரந்தரமானது. அது குறைவானது இது நிறைவனாது.

இந்தப் புதிய வருடத்தில் இரண்டாவது இரகத்தைச் சார்ந்த பலனை மாறாத தேவனிடமிருந்து, நீங்கள் ஒவ்வொருவரும் நிரந்தரமாக, நித்திய காலத்திற்கும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்பியே இம்மாதம் இக்கட்டுரை உங்களுக்காக எழுதப்படுகிறது.

சரி, இப்பொழுது, நமது வழக்கத்தின்படியாக **நிறைவான பலன் கிடைப்பதாக** என்ற இச்சொற்றொடர், எங்கே இருக்கிறது, அதன் பின்னணி என்ன என்பதைக் கொஞ்சம் தெரிந்து கொண்டு, பிறகு, இது தரும் பாடங்களுக்காகச் செல்லுவோம்.

பழைய ஏற்பாட்டின் சரித்திர காலத்தில், குறிப்பாக, நியாயாதிபதிகள் நாட்களின் போது, இஸ்ரவேலில், பரலோக தேவன் மீதான நம்பிக்கை கிட்டதட்ட அற்றுப்போயிருந்தது. அக்காலகட்டத்தில், பாலைவனச் சோலையாக, போவாஸ் போன்ற சில நபர்கள் தேவனுக்குப் பயந்து வாழ்ந்து வந்தனர். இந்த போவாஸ் தாராள மனம் கொண்ட ஒரு செல்வந்தன். இந்த போவாசால், ஒரு சமயம் வயல்வெளியில் சிந்தின மணிகளைப் பொறுக்க வந்த ஒரு மோவாபிய ஸ்திரீயிடம் சொல்லப்பட்ட வார்த்தைகள் தான் நமக்கு இம்மாதத்திற்கான தலைப்பாகக் கிடைத்திருக்கிறது. நான்கு அதிகாரங்களைக் கொண்ட ரூத்தின் சரித்திரப் புத்தகம் படிப்பதற்கு சுவாரசியமானது மாத்திரமல்ல, தேவன் மீதான ஒருவனின் நம்பிக்கையை மெருகேற்றக் கூடியதாகவும் இருக்கிறது. அன்பு, பக்தி, மீட்பு போன்றவை இந்நூலில் அழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

"அப்பத்தின் வீடாகிய பெத்லகேமில்", இஸ்ரவேலின் தேவ விரோதச் செயலால் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சத்திலிருந்து தப்பிக்க எலிமலேக்கு தன் பக்தியுள்ள மனைவியாகிய நகோமியோடும், இரண்டு குமாரரோடும் மோவாப் தேசத்திற்கு புறப்பட்டுப் போனான் (1:1). பெரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், முழு நம்பிக்கையோடு குடும்பமாகப் போன இடத்தில் எலிமலேக்கு மரிக்க நேர்ந்து நகோமி கைம் பெண்ணானாள். இந்தப் பேரிழப்பிலிருந்து, இரண்டு மகன்களைக் கண்களால் பார்த்து, அவர்களால் ஆறுதல் பெற்றுத் தெப்புத்தேறி வந்த நிலையில், அவர்களிருவரையும் இழக்க நேர்ந்தது. இந்த ஆண்கள் மூவரும் இறக்க நேர்ந்ததற்கான காரணங்கள் என்ன என்று நமக்குச் சொல்லப்படவில்லை. ஆயினும், இம்மூவரின் இழப்பால் தெய்வபயமுள்ள நகோமி எப்படி புழுவாய்த் துடித்து, நிலைகுலைந்து போயிருப்பாள் என்பதை ஊகிக்கவே நடுக்கமாக இருக்கிறது. ஒரு அந்நிய தேசத்தில் புருஷனையும், இரண்டு மகன்களையும் பறிகொடுத்து தவித்தவளாகி நிற்பதை யாரால் தாங்கிக் கொள்ள முடியும்? வேதாகமம் யோபுவின் துக்கத்தை மகாக் கொடிய துக்கம் என்கிறது (2:13) ஆனால், நகோமியினுடையது அதைவிடப் பெரிய துக்கமாக அல்லவா தெரிகிறது?.

இப்படித் துக்கம் தொண்டையடைக்க வாழ்ந்து வந்த நிலையில் தான், கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று கேள்விப்பட்டுத் தன் இரண்டு கைம் பெண் மருமகள்களோடு தாய்நாட்டுக்குத் திரும்பப் புறப்பட்டு வந்தாள். வரும் வழியில், மாமியார் நகோமியின் உணர்வுப் பூர்வ பேச்சை கேட்டு சத்தமிட்டு அழுது, மாமியை மனதார முத்தமிட்டு ஒர்பாள் தன் ஜனத்தண்டையும், தேவனண்டையும் திரும்பப் போய் விட்டாள் (1:12-14). ஆனால், ரூத்தோ, உடும்புப் பிடியாய் மாமியைப் பற்றிக் கொண்டு, வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் மாமியோடு பெத்லெகேமுக்கு வந்து சேர்ந்தாள் (1:22).

இங்கே ரூத், மாமியின் மீது கொண்டிருந்த பாசத்தையும், மரியாதையையும், மாமியின் தேவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் எப்படி விவரிப்பதென்று உண்மையாகவே தெரியவில்லை. இதையெல்லாம் முழுமையாக எடுத்துரைக்க எனக்கு அறிவும், கற்பனைத் திறனும், எழுத்து வளமும் இல்லையென்பதை இங்கே பகிரங்கமாக ஒத்துக் கொள்கிறேன். ஏனெனில், பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தாய்மார்களையே நம்முடைய காலத்து இளம் பெண்கள் சீரழித்து சின்னா பின்னப்படுத்துவதை அன்றாடக் காட்சிகளாக நாம் பார்த்துக் கொண்டு தான் உள்ளோம். ஆனால், இந்த ரூத்தோ ஒப்பீரின் தங்கமாக இன்றளவும் ஜொலிக்கிறாள். ஆகவே இவள் ஒரு தனிப்பிறவி என்பதில் யாருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ரூத், தன் மாமியோடு, அப்பத்தின் வீடாகிய பெத்லெகேமுக்கு என்ன நிலைமையில், எந்தப் பின்னணியில் வந்து சேர்ந்தாள் என்ற செய்தி விரைவில் ஊரறிந்த இரகசியமாக மாறி இருந்தது. இந்த நிலைமையில், ரூத், தன் மாமியின் முழு சம்மதத்தோடு, வயல்களில் சிந்தியிருக்கும் கதிர்களைப் பொறுக்கப் புறப்பட்டாள். அப்படிப்போன போது, தனவான் போவாசுடைய கண்களில் கிடைத்த தயை இவளைத் திக்குமுக்காட வைத்தது. எள்ளுப் பொறுக்கப் போன இடத்தில் எலுமிச்சங் கனி என்று சொல்வார்களல்லவா அதைக்காட்டிலும் மேலானதொரு சிலாக்கியம். அதிலே மனம் நெகிழ்ந்து போன ரூத், **எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது?** என்று கேள்வி எழுப்பினாள் (2.10). இக்கேள்விக்குப் போவாஸ் அளித்த பதிலில் தான், நம்முடைய தலைப்பு இடம் பெற்றுள்ளது. அதற்குப் போவாஸ் பிரதியுத்திரமாக **உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும், தாயையும், உன் ஜன தேசத்தையும் விட்டு முன்னே அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத் தக்க பலனை கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவ னாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்** (ரூத். 2:11-12).

அருமையானவர்களே, ஆவியானவர் போவாசைக் கொண்டு ரூத்திற்கு வாக்களித்த நிறைவான பலன் தான் இந்தப் புதிய ஆண்டில் உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்க ஆசைப்படுகிறேன். கதிர் பொறுக்கப் போன

ரூத்திற்கு **வாக்கு** மாத்திரம் கிடைத்ததா அல்லது வாக்களித்தபடி **நிறைவான பலன்** கிடைத்ததா என்று நாம் தெரிந்து கொண்டால், நமக்கு இப்புதிய ஆண்டில் நிறைவான பலன் கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்பதை உறுதி செய்து கொள்ளலாம். அப்படித் தானே, ஆகவே, இப்பொழுது, ரூத்திற்கு எந்தெந்த வகையில் பலன் கிடைத்தது என்றும், அது எப்படி நிறைவாக இருந்ததென்றும் தெரிந்து கொள்ளுவோம்.

## I நம்பிக்கையற்ற நிலையில் கணவன் என்ற பலன்

அருமை மருமகள் ரூத்திற்கு கிடைத்த நிறைவான பலன்களின் முதலாவதாக, அவளுக்குக் கிடைத்த கணவனை நாம் சொல்லலாம்.

இந்த ரூத் நகோமியோடே வந்த சூழலை எண்ணிப்பாருங்கள். குறிப்பாக நல்லவள் நகோமி, தன் உருக்கமான பேச்சின் ஊடே சொன்ன ஒரு வாக்கியத்தைக் குறித்துப் பாருங்கள். **"என் மக்களே திரும்பிப் போங்கள்; என்னோடே ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குப் புருஷராகும்படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ?"** (2:11). அன்றைய நாளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வழக்கம், புருஷன் இறந்து விட்டால், புருஷனோடே பிறந்தவரை மணந்து கொள்வது. இயேசுவின் நாட்கள் பரியந்தம் இவ்வழக்கம் இருந்துள்ளதாகவே தெரிகிறது. எப்படியெனில், இயேசு பூமியில் இருந்த நாட்களில், ஒரு சமயம், உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயர், இந்த அடிப்படையில் தான் ஒரு கேள்வியை எழுப்பினார். வரிசையாக ஏழு சகோதரர்களை மணந்த ஒரு ஸ்திரீ உயிர்த்தெழுதலில் யாருக்கு மனைவியாயிருப்பாள்? என்று (மத். 22:24-30).

ஆனால், மாமி நகோமிக்கோ புருஷனுடன் சேர்ந்து வாழத்தக்க வாய்ப்பும், வயதும் இல்லை. அப்படியே வாழ்க்கைப்பட்டு பிள்ளை பெற்றாலும், அவர்கள் பெரியவர்களாகுமட்டும் இவர்கள் பொறுத் திருப்பதும் கூடாத காரியம் (1:13). அதாவது, யதார்த்த சூழலைப் பார்க்கும் போது, இனி ரூத்திற்கு ஒரு வாழ்க்கை என்பது ஒரு பட்டுப்போன மரமாகவே காட்சி தந்தது. ஆயினும், முடியாது என்று மனிதன் முடிவு கட்டும் நிலையில் தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்துவது தேவனுக்குப் பிரியமான காரியம். "ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே" (யோவா 11:39) என்ற நிலையில் தான், லாசருவை இயேசுவைக் கொண்டு உயிரோடே எழுப்பினார்.

அந்த தேவன் இங்கேயும் ரூத்திற்கு, மாமி நகோமி மூலம் ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டினார். அதன் ஒரு பங்காக நீதிமானாகிய போவாஸ் (ரூத். 3:8), தேவ திட்டப்படியும், நாட்டுச் சட்டப்படியும் திருமணம் செய்யும் ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து, தடைகளைக் கடந்து, "உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப் போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக; நீ எப்பிராத்தாவிலே பாக்கியவானாயிருந்து, பெத்லெகேமிலே புகழ் பெற்றிருக்கக்கடவாய்" என்று அநேகருடைய வாழ்த்துக்களுக்கு மத்தியில் ரூத்தை விவாகம் பண்ணினான் (4:11-13).

இப்புதிய ஆண்டை ஆரம்பித்து, சில வாரங்களைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கன்பானவர்களே, இதெல்லாம் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது, ஆனால், இன்றைக்கு நடைமுறையில் இது சாத்தியமாகுமா என்று நினைக்கிறீர்களா? அப்படி ஒருவேளை நீங்கள் நினைத்தால் அந்த நினைப்பை உடனே குழிதோண்டிப் புதையுங்கள். ரூத்தின் சரித்திரம், சர்வ வல்ல தேவனுடைய வழி நடத்துதலுக்கும், பராமரிப்புக்கும் எடுத்துக்காட்டாக எகிறி நிற்கும் ஓர் ஒப்பற்ற உண்மைச் சம்பவம். நம்பிக்கையற்ற நிலையிலும், மனிதர்கள் இனி முடியாது என்று கைவிட்ட நிலையிலும், அனைவரும் ஆச்சரியமடையத்தக்க அளவில் தன் வல்லமையை வெளிப்படுத்தும் தேவனைத் தான் நானும், நீங்களும் தேவனாகப் பெற்றிருக்கிறோம். ஆகவே, நாம் எந்த நிலையிலும் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று தேவன் சொல்லியிருப்பதை (எபி 13:5) நாம் மறந்து விடவே கூடாது.

இந்தப் புதிய ஆண்டைக் குறித்த கலக்கம் வேண்டாம். என் வாழ்க்கை அப்படியிருக்கிறதே, இப்படியிருக்கிறதே, எப்படி ஆகுமோ, என்ன நடக்குமோ என்று திகைக்கவும் வேண்டாம். முழு நம்பிக்கை வைப்போம். ரூத் தன் **மாமி சொன்னபடியெல்லாம் செய்தது போல,** பரலோக தேவன், அவர் தம் **வசனத்தில் சொல்லியுள்ளபடியெல்லாம்** செய்வோம். அப்பொழுது, ஒரு புதிய வாழ்க்கை நமக்குக் கிடைக்கும். இப்புதிய ஆண்டு நமக்கு ஆசீர்வாதமானதாக இருக்கும்.

## II <u>பிள்ளைப் பேறு என்ற பலன்</u>

உத்தம மருமகள் ரூத்திற்கு கிடைத்த நிறைவான பலன்களில் இரண்டாவதாக, அவளுக்குக் கிடைத்த குமாரனை நாம் கூறலாம்.

தன் வாழ்க்கையைப் பற்றிய, எதிர்காலத்தைப் பற்றிய எந்த நம்பிக்கையும் இல்லாத நிலையில், வயல்களில் சிந்திய மணிகளைப் பொறுக்கப் போன மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்திற்கு, நீதிமானும், தனவானுமாகிய ஒரு கணவன் மாத்திரம் கிடைக்கவில்லை. அந்தக் கணவன் மூலமாக ஒரு ஆண் பிள்ளையையும் அவள் பெற்றாள் (4:13) இஸ்ரவேலிலே, திருமணமான நிலையில், பிள்ளைப் பேறு என்பது மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒன்று. ஒருவேளை, நம்முடைய நாட்களிலும் நிலைமை அப்படித் தானே இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம். உண்மை தான். ஆனால், நம்மைக் காட்டிலும் அவர்களுக்கு அது ஒரு கௌரவப் பிரச்சினையாகவும், மானப் பிரச்சினையாகவும் இருந்துள்ளது. ஆபிரகாமின் மனைவியாகிய சாராளிலிருந்து நாம் கவனித்துப் பார்த்தால், பிள்ளையில்லாத நிலையில் அவர்கள் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள், எப்படிப் பாடுபட்டி ருக்கிறார்கள் என்பது விளங்கும். (ஆதி 15:2,3,17:17).

ஏசாயா தீர்க்கன் தன்னுடைய நூலில், யுத்த காலத்திற்குப் பின்னான ஒரு நிலையை விளக்கும் போது இவ்விதம் கூறியுள்ளான். அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப்

புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம். **எங்கள் நிந்தை நீங்கும் படிக்கு** உன்பேர் மாத்திரம் எங்கள் மேல் விளங்கட்டும் என்பார்கள் (ஏசாயா 4:1). ஏன் இப்பெண்கள் இப்படிச் சொன்னார்கள்? என்ன காரணம்? பிள்ளைப் பேறு ஒரு யூத ஸ்திரீக்குக் கட்டாயம். ரூத் புத்தகத்தைத் தொடர்ந்து வரும், ஒன்று சாமுவேல் நூலில் நாம் அன்னாளின் நிலையை நாம் அறிவோம். பிள்ளையில்லாத நிலையில் அவள் எப்படி மனங்கசந்து அழுது தேவனிடத்தில் மன்றாடினாள் என்று (1சாமு 1:10-11). ஆக பிள்ளைப் பேறு, அதுவும் ஆண் பிள்ளை என்ற ஆசீர்வாதம் இவளுக்கு தேவனாலே சுதந்திரமாகக் கிடைத்தது (சங். 127:4).

பொதுவாக, ஒரு ஆண்பிள்ளை பிறக்கும் போது, தாயின் பெயரோ அல்லது தகப்பன் பெயரோ தான் சொல்லப்பட்டிருக்கும். ஆனால், போவாசுக்கு ரூத் பெற்ற குமாரன் பற்றி மாத்திரம் சொல்லப்படாமல், அவன் சந்ததியைப் பற்றிய விபரமும் அப்பகுதியில் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும் (4.18-22). இது வழக்கத்திற்கு மாறானது. அப்படி யானால், இவள் பெற்றது சிறப்புக்குரிய ஒரு குமாரனாகத்தானே தெரிகிறது. எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் பாருங்கள்! எந்த நிலைமையில், எப்படிப்பட்ட சூழலில் மாமியை அண்டி வந்த ரூத், இப்பொழுது எவ்வளவு உயரத்தில் இருக்கிறாள் பாருங்கள். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக" என்ற வாக்குத்தத்தம், எப்படி படிப்படியாக ஒரு நிறைவைத் தந்து கொண்டிருக்கிறதென்று எண்ணிப் பாருங்கள்.

எனக்கன்பானவர்களே, என்னுடைய வாழ்க்கையிலும், இப்புதிய ஆண்டில் நிறைவான பலன் கிடைக்க வேண்டுமென்று காத்திருப்பவர்களே, காரியங்களை கவனமாகக் கவனியுங்கள். ரூத்துக்குக் கிடைத்த அடுத்தடுத்த ஆசீர்வாதத்தின் இரகசியம் என்ன? ஒருவேளை, அவள் மாமியை அண்டி வந்தது என்று நீங்கள் மேலெழுந்தவாரியாகச் சொல்லலாம். உண்மைதான். அதை விட மேலாக, அவள், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்தது தான். அப்படியானால், இவ்வாண்டில் நிறைவான பலனுக்கு ஆசைப்படும் நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் ஓடி வந்து விட்டோமா? **கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலம்** என்ற சொற்றொடரின் பொருள் என்ன? **அவருடைய வல்லமையுள்ள வார்த்தையின் கீழ் நாம் அடைக்கலமாய் வருவது தான்**. இப்பூமியில், எனக்கு வேறெதுவும் வேண்டாம், தேவனுடைய வார்த்தைகள் போதும், கிறிஸ்துவின் உபதேசம் எனக்குப் போதும், அதன்படி மாத்திரம் நான் செய்வேன் என்று நாம் இவ்வாண்டில் தீர்மானிக்க வேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் நாம் இப்படியாக கிறிஸ்துவின் உபதேசம் மாத்திரம் போதும் என்று முடிவெடுத்து, கிறிஸ்து நமக்காகக் கொடுத்திருக்கும் உபதேசச் சட்டப்படி வாழ முடிவெடுப்போமானால், ரூத்திற்கு நிறைவான ஆசீர்வாதங்களுக்கு வழிவகுத்த சர்வவல்ல தேவன்,

நமக்கும் பரத்திலிருந்து நன்மையானவைகளைக் கட்டளையிடுவார். (யாக்.1:17) நமக்கு இதில் எவ்வித சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

## III கிறிஸ்துவின் வரிசையில் இடம் என்ற பலன்

இன்றளவும் நினைக்கப்படும் ரூத்திற்கு கிடைத்த நிறைவான பலன்களின் முத்தாய்ப்பாக, இயேசு ஆண்டவரின் ஜனனத்தின் வரிசையில் அவள் பெயர் இடம் பெற்றதை நாம் சொல்லலாம்.

ஆவியின் சிந்தையுடைய ஒரு மனிதனைப் பார்த்து, சரீரப்பிரகாரமான ஆசீர்வாதம் பெரிதா அல்லது ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெரிதா என்றும், தற்காலிக நன்மை சிறந்ததா அல்லது நிரந்தர நன்மை சிறந்ததா என்றும் கேட்டால், நிச்சயமாக ஆவிக்குரிய ஆசீர்வாதமும், நிரந்தர நன்மையும் தான் பெரிது என்று பளிச்சென பதில் தருவான். நீங்களும் ஆவியின் சிந்தையுடையவர்களாயிருப்பதால் இக்கருத்தை ஒத்துக்கொள்வதில் உங்களுக்கும் சிரமமேதும் இருக்காது என்றே நான் நம்புகிறேன்.

அப்படியானால், நிறைவான பலன்களைப் படிப்படியாகப் பெற்று வருகிற ரூத்திற்கு, ஏற்கனவே பெற்ற இரண்டு பலன்கள், ஒருவேளை, அவளுக்கு இருந்த சூழலில் பெரிதான ஒன்றாக இருந்தாலும், இயேசுவின் ஜனனத்தின் வரிசையில் பலன் என்ற ஆசீர்வாதம் இருக்கிறதே அதை நினைத்தே பார்க்க முடியவில்லை. இந்த ரூத்தைப் பார்க்கிலும் எத்தனையோ சிறந்த பெண்கள், பக்திப் பெண்கள் இஸ்ரவேலிலே இருந்துள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் கிடைக்காத ஓர் உன்னத இடம், இந்த அந்நிய மோவாபிய ஸ்திரீக்கு கிடைத் திருக்கிறதென்றால் அது எப்படி என்று பாருங்கள்! நிறைவான பலன் என்பதற்கு எடுத்துக்காட்டாக இதைவிட வேறு எதை நாம் சொல்ல வேண்டும்? உலகம் உள்ளளவும் இவள் பேசப்பட்டாக வேண்டும் தானே. போவாஸ் ஓபேத்தை ரூத்தினிடத்தில் பெற்றாள் என்றும், ஓபேத் ஈசாயைப் பெற்றான் என்றும், ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான் என்றும் (மத். 1:5,6) வேத வசனங்களில் எழுதப்பட்டுள்ளது.

இயேசு தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார் (மத். 1:1, ரோம 1:5) அந்தத் தாவீதோ இவளுக்குக் கொள்ளுப்பேரன். சரீரப்பிரகாரமாக, இயேசுவின் வரிசையில் வந்து விட்டாளே! ஆஹா, இந்த மோவாபிய ஸ்திரீக்கு கிடைத்த பாக்கியத்தை தான் பாருங்களே! **அவளுக்குக் கிடைத்த வாக்கின்படி நிறைாவன பலன் இப்பொழுது இவளுக்குக் கிடைத் திருக்கிறதா இல்லையா?** சொல்லுங்கள். நிச்சயமாகவே கிடைத்திருக்கிறது. நம்முடைய தேவன் வாக்கு மாறாதவர் மாத்திரமல்ல, பட்சபாதமுமில்லாதவர் (அப். 10:34) ரூத்திற்கு நிறைவான பலனைக் கட்டளையிட்ட அதே தேவன் இன்று உனக்கும், எனக்கும் நிறைவான பலனைக் கொடுக்கச் சித்தமுள்ளவராகவே இருக்கிறார்.

ஆனால், அருமையானவர்களே, நம்முடைய பங்கிற்கு நாம் ரூத்தைப் போல நாம் செயல்பட வேண்டும். அதற்கு நாம் இந்தப் புதிய ஆண்டில் நம்மை எல்லா வகையிலும் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆம், ரூத் மாமியின் மீது கொண்ட அன்பினிமித்தமும், மாமியின் தேவன் மீது கொண்ட நம்பிக்கையினிமித்தமும் தன்னுடைய தேசம், ஜனம், குடும்பம், மொழி, கலாச்சாரம் இவைகளைத் துச்சமென நினைத்து வந்ததுபோல், நாம் சர்வ வல்ல தேவன் மீது கொண்டிருக்கும் அன்பினிமித்தமும், நம்பிக்கையினிமித்தமும் சிலவற்றைத் துறந்து விடும் துணிவுயுடையவர்களாக இருக்க வேண்டும். தேவன் மீதான நம்பிக்கையா (2கொரி. 1:9) அல்லது வீணான பாரம்பரியமா என்று வரும் போது **பாரம்பரியத்தைத் தூக்கி எறிய வேண்டும்.** தேவனுடைய வார்த்தைகளின்படியான செயல்பாடா (மத். 15:6,9) அல்லது மதக்கோட்பாடுகளின்படியான சடங்காச்சாரமா என்று வரும்போது, **சடங்காச்சாரத்தை உதறித் தள்ள வேண்டும்.** இயேசுவின் வார்த்தைகளின்படியான உண்மையான ஆராதனை (யோவா 4:24) அல்லது மனித விருப்பத்தின்படியான சுய இஷ்டமான ஆராதனையா என்று வரும் போது தேவனைப் பிரியப்படுத்தாத **சுய இஷ்டமான ஆராதனைக்குப் பாடை கட்ட வேண்டும்.** சுவிசேஷத்தின்படியான இரட்சிப்பா (2தெச 2:14) அல்லது உணர்வுகளினடிப்படையிலான இரட்சிப்பா என்று வரும் போது, **உணர்வுகளினடிப்படையிலான இரட்சிப்பை ஒதுக்க வேண்டும்.** இப்புதிய ஆண்டில் இப்படிச் செய்யத் தீர்மானிப்போமானால், நிறைவான பலன் என்பது நமக்குக் கண்டிப்பாகக் கானல் நீராக இராமல், நிச்சயமாகவே பெற்று அனுபவிக்கும் ஒன்றாக இருக்கும்.

அன்பானவர்களே, ரூத்திற்கு இயேசு ஆண்டவரின் ஜனனத்தின் வரிசையில் நிரந்தரமான இடம் என்ற நிறைவான பலன் கிடைத்தது போல, அவர் மீது நாம் உண்மையான அன்பும், முழுநம்பிக்கையும் வைத்து வாழ்வோமானால், பரலோகம் என்கிற நிரந்தரமான, நிறைவான பலன் நமக்கு உண்டு. அப்போஸ்தலனாகிய பவுல், "இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது". (2தீமோ 4:8) என்று கூறுவது நமக்கு எப்போதும் நினைவில் இருக்கட்டும். ரூத்திற்கு கிடைத்த "ஜனனத்தின் வரிசையில் இடம்" என்ற பாக்கியத்தை விட, **பரலோக பாக்கியம் என்பது பலகோடி மடங்கு அதிகமானது**. இந்த பாக்கியத்திற்காக நாம் நம்மைத் தகுதிப்படுத்த வேண்டும்.

இப்படி நம்மை நாம் தகுதிப்படுத்த இந்த மோவாபிய ஸ்திரீ, நமக்காக இப்புதிய வருடத்தின் முதல் மாதத்தில் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறாள். பாடம் கற்றுக் கொள்ளுவோம். அதன் மூலம், நிறைவான பலனை இப்பூமியின் வாழ்க்கையிலும், நித்தியமான பலனை மறுமையின் வாழ்க்கையிலும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோம். ஆமென்.

*EZS ராஜநாயகம்*

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## ஆறாவது பட்டமளிப்பு விழா

## அழைப்பிதழ்

நேரம் : காலை 9.30 மணி

நாள் : 10.02.2007 சனிக்கிழமை

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.

**சிறப்புச் செய்தி**

சகோ. சார்லி டி பால்மா U.S.A.

**Bro. Charlie Di Palma**

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி**
த.பெ.எண். 27,
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030, 230603
செல் : 98427 - 30382

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration** : **3 Years** (Semester System)

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S.** (Bachelor of Biblical Studies)

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**இயக்குநர்**

எக்லீசியா வேதாகமக் கல்லூரி

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள்

இம்மாதத்திற்கான நமது பாடத்தில் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களைக் குறித்து பார்க்கப் போகிறோம். நமக்கு தெரிந்திருக்கிறபடி முதலில் 12 பேர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள், ஆனால், பின்பு யூதாஸினிடத்திற்கு மத்தியா தெரிந்தெடுக்கப்பட்டான். புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக பவுல் அழைக்கப்பட்டான்.

முதலாவது, அப்போஸ்தலனென்றால் யாரென்று நாம் பார்க்கலாம். அப்போஸ்தலனென்றால் யாரொருவர் அவனை தெரிந்தெடுக்கிறாரோ அவரை பின்பற்றவும் அவரால் பயிற்றுவிக்கப்படவும் அவரால் அனுப்பப்பட்டு அவருடைய பிரதிநிதியாகவும் இருக்கிறவன் என்று பொருள். யூதாஸ் காரியோத்தினிடத்திற்கு ஒருவன் தெரிந்தெடுக்கப்படும்போது அவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் இரண்டு பட்டியலிடப்பட்டிருக்கிறது. முதலாவது, அவன் யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு அவன் இயேசுவை பின்பற்றின கூட்டத்தில் ஒருவனாய் இருந்திருக்க வேண்டும். இரண்டாவது, ஆண்டவருடைய உயிர்த்தெழுதலுக்கு பின்பு அவரைக் கண் கண்ட சாட்சியாய் இருக்க வேண்டும். அதாவது, இயேசுவின் ஊழிய நாட்களில் அவன் அவரைப் பின்பற்றினவர்களில் ஒருவனாக இருக்க வேண்டும். இதற்குப் பின்பு கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி அவனை தனது அப்போஸ்தலனாக இருக்கும்படியும், உயிர்த்தெழுதலுக்கு பின்பு தன்னைக் கண்டவர்களில் ஒருவனாக இருக்கும்படியாகவும் தகுதிப்படுத்தினார்.

கலிலேயா நாட்டுப் பகுதியில், அவர் நடந்து பல இடங்களுக்கு போகையில், அவர் சில நபர்களைப் பார்த்து தன்னைப் பின்பற்றி வருமாறு அழைத்தார். அவர் என்ன நோக்கத்திற்காக அவர்களை அழைத்தாரோ அதை நிறைவேற்றி தனக்கு சேவை செய்யும் தகுதிகள் அவர்களிடத்தில் கண்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக நாம் மத்தேயு 4:18-23 ஆகிய வசனங்களை கவனிக்கையில், இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு; என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு அவருக்குப் பின்சென்றார்கள். அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும் அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள். பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.

மத்தேயு 10 ஆம் அதிகாரத்திற்கு சென்று நாம் காண்கையில் இயேசுவால் அழைக்கப்பட்ட 12 அப்போஸ்தலர்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருப்பதை காணலாம். மத். 10:1-4 வசனங்களின்படி, அப்பொழுது அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே.

இயேசு இந்த பன்னிரண்டு பேரையும் தன்னைப் பின்பற்றும்படி அழைத்தார். ஏனெனில் அவர்களுக்கு போதித்து, அவர்களைப் பயிற்றுவித்து, தான் இந்த உலகத்தை விட்டு தன் பிதாவினிடத்திற்கு போனபின்பும் தன்னுடைய பணியை அவர்கள் தொடர வேண்டும் என்பதற்காகவே அப்படி செய்தார். அவர் வாய்மொழியால் மாத்திரம் அவர்களுக்கு உபதேசிக்காமல் மற்றவர்களுக்கு உபதேசிப்பதைக் கேட்கவும் அவர் செய்த பலத்த செய்கைகளையும் அற்புதங்களையும் **காணும்படியும்** செய்தார்.

மீண்டுமாக மத்தேயு 10ம் அதிகாரத்திற்கு சென்றால் அவர்களுக்கு இயேசுவானவர் கட்டளையிடுவதைக் காணலாம். இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால், நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள். போகையில், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.

உங்கள் கச்சைகளில் பொன்னையாவது, வெள்ளியையாவது, செம்பையாவது, வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடி வைக்க வேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான். எந்தப் பட்டணத்திலாவது கிராமத்திலாவது நீங்கள் பிரவேசிக்கும் போது, அதிலே பாத்திரமானவன் யாரென்று விசாரித்து, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள். ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும் போது, அதை வாழ்த்துங்கள். அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள் மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது. எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும் போது,

உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 10:5-15). மேலும் அவர், அவர்களுக்கு பல விஷயங்களை எடுத்துக் கூறுகிறார். அவர்களுடைய போதனையைக் குறித்து அவர் அவர்களுக்கு இப்படியாக சொல்லுகிறார், பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர் (மத்தேயு 10:20).

அப்போஸ்தலர்களில் பேதுரு யோவான், பவுல் ஆகியோர் பளிச்சென்று நம்முடைய கண்களுக்குத் தெரிகிறார்கள். முதல் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் பேதுரு நல்ல பெலமான குணாதிசயங்களைக் கொண்டவர், அவர் அடிக்கடி மற்றவர்கள் சார்பில் பேசியிருப்பதை நாம் காணமுடியும். உதாரணமாக மத்தேயு 16:16-19ல் கிறிஸ்து, அப்போஸ் தலர்கள் தன்னை யார் என்று நினைப்பதாக அவர்களைப் பார்த்துக் கேட்டார். பேதுரு உடனே அவர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற அறிக்கையிட்டர்.

இயேசு அவனுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை செய்கிறார், இந்த அறிக்கையின் பேரில், அதாவது கிறிஸ்து தேவனுடைய குமாரனென்ற அறிக்கையில் பேரில் தனது சபையை கட்டுவதாக கூறுகிறார். அநேகர் பேதுருவின் மேல் அவர் கட்டுவதாக சொல்லுகிறார் என நினைக்கிறார்கள், அது உண்மையல்ல அவனும் நம்மை போல ஒரு மனுஷன் தானே. பேதுரு தான், மற்ற இடங்களில் பேசியது போல இங்கேயும் பேசுகிறார் என்பது உண்மையாயிருக்கிறது. ஆனாலும் யாரோ ஒருவர் பேசவேண்டியதாக யிருக்கிறது. பேதுரு முன்னோடிகளுக்கு முன்னோடியாக இருப்பதால், மற்றவர்களுக்கு முன்னமே இவர் பேசுகிறார். எங்கே, இயேசு தேவ குமாரன் என்கிற எல்லோரின் குரலும் இவரின் மூலமாக வெளிப்பட்டது. இதைத்தான் இயேசு கேட்க விரும்பினார், ஏன் என்றால் இந்த அறிக்கையில் மேல் தான் அவர் தமது சபையைக் கட்டுவார். அதுவே நிலையான அஸ்திபாரமாக இருக்கிறது, சபை என்றென்றும் நிலைநிற்கும் என்றும் நமக்குச் சொல்லுகிறது (1கொரி 3:11).

இதன் பின்பாக, பன்னிருவரில் ஒருவனான யூதாஸ் அவரை 30 வெள்ளிக்காசுக்காக காட்டிக் கொடுத்தான் (மத். 26:14-50). பேதுருவும் மூன்று முறை ஆண்டவரை மறுதலித்தான். மற்ற எல்லா அப்போஸ் தலர்களும் நமது ஆண்டவர் அவருடைய பகைவர்களாக தங்களை கருதிக் கொண்டவர்களால் பிடிக்கப்படும்போது, அவரை விட்டு ஓடிப்போனார்கள். யூதாஸ் நான்று கொண்டு மரித்தான் எனக்காண்கிறோம்.

இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்னால், பலருக்கு அவர் தரிசனமானார் அவர் பரமேறிப் போகையில் தமது சீஷர்களைப் பார்த்து, பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள்

அவரைக் கண்டு பணிந்து கொண்டார்கள்; சிலரோ சந்தேகப் பட்டார்கள். அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி; வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் ஆமென் (மத்தேயு 28:16-20). மாற்குவின் நூலில் நாம் வாசிக்கையில், "பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாத வனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று காண்கிறோம். (மாற்கு 16:15,16).

யோவான் 16ம் அதிகாரத்தில், அப்போஸ்தலர்களுக்கு உபதேசிக்கப் பட்டவைகளை நினைப்பூட்டவும், சகல சத்தியத்திற்குள் வழி நடத்தவும், வேறு மொழியில் பிரசங்கிக்கிற வல்லமையைக் கொடுக்கவும், புதிய ஏற்பாடு அன்று எழுதப்படாதிருக்கையில், அப்போஸ்தலர்கள் தேவ சித்தத்தை வெளிப்படுத்த தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என நிரூபிக்க பல அற்புதங்களை செய்யவும் அவர்களிடத்தில் வேறொரு தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வருவார் என்று அவர்களுக்கு கிறிஸ்து வாக்களித் தார். பின்பு அப்போஸ்தலர் 1:8ல் நமது ஆண்டவர் பரமேறி செல்வதற்கு முன்பாக, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்பட்ட பின்பு எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும் பூமியின் கடைசி பரியந்தமும் தனக்கு சாட்சியாக இருப்பீர்கள் என்றார்.

தமது அப்போஸ்தலரை விட்டு இயேசுவானவர் பரமேறி சென்ற பின்பு, யூதாஸினிடத்திற்கு மத்தியா தெரிந்தெடுக்கப்பட்டான். பெந்தே கொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் ஊற்றப்பட்டார். அவர்கள் பல பாஷைகளை பேசவும், அங்கே கூடியிருந்த வர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும் செய்தார்கள். அதன் விளைவாக ஏறக்குறைய மூவாயிரம் பேர் கர்த்தரால் சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பின்பு அப்போஸ்தலர் புத்தகம் முழுவதும் நாம் வாசிக்கையில் அப்போஸ்தலர் களின் பிரசங்கத்தையும், திரளானவர்கள் மனமாற்றம் அடைவதையும் காணலாம். பவுல் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக நியமிக்கப்படு வதையும் நாம் காணலாம்.

இப்படி நாம் அப்போஸ்தலர் நடபடிகள் நூலை படிக்கையில் அப்போஸ்தலர்கள் எங்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதை நாம் காணலாம். அவர்கள் மாத்திரமல்ல அவர்களால் மனமாற்றமடைந்தவர்களும் சுவிசேஷத்தை எங்கும் எடுத்துச் சென்றார்கள். ஆதலால் தான் கொலோ செயர் 1:23ல் சுவிசேஷம் பூச்சக்கரத்தில் கடைசிபரியந்தம் சென்றிருக்கிறது என்று பவுலால் எழுதப்பட்டிருக்கிறது. வரலாறு சொல்கிறது யோவான் தவிர

மற்ற அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சியாக மரித்தார்கள் என்று. யோவான் சிறைபிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார், ஆனாலும் நமக்கு தெரிந்தபடி அவர் இயற்கையாக மரித்தார். முதல் நூற்றாண்டு முடிந்த திலிருந்து நம்மிடையே அப்போஸ்தலர்கள் இல்லை.

பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு, மற்றவர்களாளும், சில அப்போஸ்தலராளும் வேத வசனம் எழுதி கொடுக்கப்பட்டது, அந்த வசனம் இந்நாள் வரை காக்கப்பட்டும் இருக்கிறது. நாம் அதை வாசித்து தியானித்து, அதன் போதனைக்கு கீழ்ப்படிய வேண்டும். நாம் இன்று அப்போஸ்தலர் களாக இருக்க முடியாது என்றாலும், நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிற சீஷராக யிருக்கலாம். நாம் கிறிஸ்தவர்களாகவும் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாகவுமிருக்கலாம், அப்படியிருந்து நித்திய ஜீவனைப் பற்றும் நம்பிக்கையோடு இருக்கலாம். கர்த்தருடைய சேவையை செய்வதிலும் கர்த்தருடைய வசனத்தை நமக்கு தருவதிலும் அவர்கள் செய்தவைகளுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் அவர்களை ஆராதிப்பதில்லை. அவர்கள் மூலமாக ஜெபிப்பதுமில்லை, ஆனால், அவர்கள் தேவனுடைய ஊழியர்கள் என்பதினால் அவர்களை நாம் பாராட்டுகிறோம்.

நாமும் இன்று தேவனுடைய ஊழியக்காரராகயிருக்கலாம், நாம் கிறிஸ்துவை பின்பற்றுவர்களாயிருக்கவும். நாம் தேவனுக்கும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்கும் கீழ்ப்படிந்தவர்களாகியிருக்க வேண்டும். நான் அதை செய்திருக்கிறேன், நீங்களும் அவைகளை செய்ய ஊக்கப்படுத்து கிறேன்.

**J.C. Choate** **J.C. சோட்**

## நாளும் நடப்பும்

1. **ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹீசைன் பலத்த எதிர்ப்புக்கிடையே தூக்கிலிடப்பட்டார்.**
2. **இந்தியாவிலேயே முதன் முறையாக கிராம சுகாதார செவிலியர்களுக்கு செல்போன் வழங்கும் திட்டத்தை முதல்வர் கருணாநிதி தொடங்கி வைத்தார்.**
3. **சூரியனில் ஒரு பொருளின் எடை பூமியில் உள்ளதை விட 28 மடங்கு அதிகமாக இருக்கும் எனக் கண்டுபிடித்துள்ளனர்.**
4. **ஆஷஸ் தொடரை ஆஸ்திரேலியா 5-0 என்ற கணக்கில் வென்று சரித்திரம் படைத்தது.**
5. **உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள நொய்டாவில் ஒரு வெறியனால் பல சிறுமிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப் பட்டுள்ளனர்.**

பெண்கள் பகுதி

# ஒதுக்கப்பட்டவள் உன்னதமடைந்தாள்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, தாய்மார்களே, கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இப்புதிய ஆண்டை கண்டிருக்கிறோம். இந்த ஆண்டை கூட்டிக் கொடுத்த தேவனுக்கு நன்றியையும், உங்களுக்கு என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமையானவர்களே ரூத் பற்றி அநேகமாக நாம் அனைவரும் அறிந்தே வைத்திருக்கிறோம். நல்ல மருமகளுக்கு ரூத்தும், மாமியாருக்கு நகோமியையும் நாம் உதாரணமாக பேசுவோம். ரூத், உலகம் உள்ளளவும் பேசப்படும் ஓர் அற்புதமான **படைப்பு**. அவள் ஒரு மோவாபிய ஸ்திரீ. நகோமி பஞ்சம் பிழைப்பதற்காக பெத்லகேமிலிருந்து தன் இரு ஆண் மக்களோடும் மோவாபுக்குச் சென்று ரூத்தை தன் ஒரு மகனுக்கு கொண்டாள். ஆனால், தேவ சித்தம் வேறு விதமாய் இருந்தது. நகோமியின் கணவனும், அவள் இரு ஆண்மக்களும் தவறிவிட்டதால் இவர்கள் தனித்து விடப்பட்டனர். ரூத், நகோமி இருவரும் பெத்லகேம் நோக்கிச் செல்கின்றனர். அந்த வழிப் பாதையில் ரூத் ஒரு மாபெரும் அறிக்கையை செய்கிறாள். **நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன் நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன் உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்** ரூத் 1:16. எவ்வளவு ஓர் ஆச்சர்யமான, நெஞ்சைத் தொடக்கூடிய சிந்தனையை கிளறக் கூடிய ஆழமான ஓர் அன்பு அறிக்கை பாருங்கள். இப்பேர்ப்பட்ட அன்பு குடும்பப் பெண்களுக்கு அவசியம்.

ரூத் மோவாபிய ஸ்திரீ. யெகோவாவைப் பற்றித் தெரியாது. ஆனால் தெரிந்த கொஞ்சத்தை வைத்து யெகோவாவின் மேல் அளவில்லாத, அசைக்க முடியாத அன்பும், நம்பிக்கையும் கொண்டாள். வெறும் அன்பு என்று விட்டு விடாமல் நம்பிக்கையையும் வைத்ததினால் ரூத்தால் நகோமியை விட்டு பிரிய இயலவில்லை.

கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் தேவன்மேல் அன்பு வைத்திருக்கிறேன் என்று வெறும் வாயளவில் சொன்னால் மட்டும் போதாது. செயல் படுத்த வேண்டும். அதற்கு நம்பிக்கை வேண்டும். கர்த்தர் மேல் அவ்வளவு நம்பிக்கை வேண்டும். முன் வைத்த காலை பின் வைக்க ரூத் விரும்ப வில்லை. வயது சென்ற மாமியை நம்பி பின்னால் சென்றால் என்ன பயன் இருக்கப் போகிறது? ஆனால், உண்மையுள்ள மருமகளாக இருக்க விரும்பினாள்.

அதுமட்டுமல்ல தான் இதுவரை வழிபட்ட தெய்வங்களை மறந்து யெகோவாவை நம்பி, அவரால் எல்லாம் முடியும். இனி மரணமேயல்லாமல் வேறொன்றாலும் அவரை விட்டு தன்னை பிரிக்கக் கூடாது என்று முடிவு செய்து விட்டாள். அப்படி தன்னை நம்பி வந்த ரூத்தை தேவன் சும்மா விட வில்லை. புறஜாதிகளுக்கும் இரட்சிப்பை உண்டுபண்ணும்படி வந்த உலக

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் வம்ச வரிசையில் இவள் பெயர் இடம் பெறும்படி பரலோகத்தின் தேவன் இரக்கம் பாராட்டினார். தன்னை நேசித்து, நம்பினவர்களை தேவன் கைவிடுவதே இல்லை.

பெத்லகேம் ரூத்துக்கு புதிய இடம் வயது சென்ற மாமிக்கு ஆகாரம் கொடுக்க வேண்டும். ரூத் வயல்வெளிக்கு கோதுமை மணி பொறுக்கச் செல்கிறாள். என்ன ஒரு தாழ்மை! மற்ற ஸ்திரீகளெல்லாம் கோதுமை அறுக்க செல்கிறார்கள். ரூத்தோ பொறுக்க செல்கிறாள். எப்படியும் தான் நம்பின் யெகோவா வழி நடத்தி பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கை. அங்கே **கர்த்தரின் கண்களின் தயவு** கிடைக்கிறது. வயல் வெளியில், பொறுக்கச் சென்ற அந்த இடத்தில், அந்நிய மண்ணில், வாழும் எஜமான் கண்ணில் தயவு கிடைக்கப் பண்ணுகிறார். அவர்தான் நம் தேவன். எந்த இடத்தில், யாரைக் கொண்டு நமக்கு வாழ்வளிப்பார் என்று நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் ரூத்தைப் போன்று தேவன் மேல் அன்பும், நம்பிக்கையும் கொண்டு அதை செயலில் காட்ட வேண்டும். **"உன் செய்கைக்குத் தக்க பலனை கர்த்தர் உனக்கு கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக"** என்று (2:12) வயலுக்கு சொந்தமான போவாஸ் என்பவன் கோதுமை மணியை பொறுக்கச் சென்ற ரூத்துக்கு வாக்குறுதி கொடுக்கிறான். பின்பு தேவனின் அனாதி தீர்மானத்தின்படியும், அனந்த ஞானத்தின்படியும் ரூத் போவாசுக்கு மனைவியாகி அவர்களுக்கு ஓபேத் என்னும் அழகான ஆண் பிள்ளையை தேவன் கொடுக்கிறார். (4:13). ஓபேத் ஈசாயை பெற்றான். ஈசாய் தாவீதுக்கு தகப்பன். தாவீதின் வம்சத்தில் இரட்சகர் இயேசு பிறந்தார். (மத்தேயு 1:15,16).

இங்கே, ரூத் தன்னை தாழ்த்துகிறாள். அவள் தாழ்மையை பார்த்து தேவன் அவள் நடைகளை நடத்துகிறார். சரியாக போவாஸிடம் அழைத்துச் செல்கிறார்.

ரூத் ஓர் உயர்வான, உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டாள். காரணம் வேறொன்றும் இல்லை. அவள் **இஸ்ரவேலின் தேவனை அடைக்கலமாக நம்பி வந்தாள்**. அந்த நம்பிக்கை, அவளை செயல்பட வைத்தது. மாமியின் பிறகே போகிறாள். ஊராரைப் பற்றி கவலைப்பட வில்லை. வயல் வெளிக்கு பொறுக்கச் சென்ற போது தன்னை யாரும் ஏதும் நினைப்பார்களே என்று பயப்படவில்லை. அவளின் செயல்கள் எல்லாம் முழுவதும் மாறுபட்ட ஒன்றாகவே இருந்தது. யாரைப்பற்றியும் கவலைப்பட வில்லை. இஸ்ரவேலின் தேவன் தன்னை பார்த்துக்கொள்வார் என்ற ஒரே நம்பிக்கையை தவிர அவளுக்கு வேறு எந்த திட்டமும் இல்லை. அறிவும் இல்லை. தன் சுய அறிவுக்கு அவள் வேலை கொடுக்கவே இல்லை.

பிரியமானவர்களே இந்த ரூத்தின் அன்பையும், நம்பிக்கையையும் பாருங்கள். நம்முடைய அன்பும், நம்பிக்கையும் எந்த இடத்தில் இருக்கிறது? இன்றைக்கு நாம் எதை அடைக்கலமாகக் கொண்டிருக்கிறோம்?. உலகம், சொந்தம், சொத்து, கல்வி, உறவு, இவைகளையா? இந்த ரூத்துக்கு ஒன்றுமே இல்லை. இஸ்ரவேலின் தேவன் மேல் நம்பிக்கை ஒன்று மட்டும் தான் இருந்தது. எனவே உன்னத நிலையை அடைந்தாள்.

இன்றைக்கு முழு வேதாகமம் நம் கையில் இருக்கிறது. தேவனின் வல்லமை, அவருடைய திட்டங்கள் எல்லாம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டு உபதேசம் அதாவது வசனம் தான் நம்மை நியாயந்தீர்க்கப் போகிறது (12:48 யோவான்) என்பதெல்லாம் நமக்கு நன்றாக தெரிகிறது. நாம் அந்த வசனத்தின் மீது கொண்டிருக்கும் அன்பும், நம்பிக்கையும் எங்கே?. ரூத், நகோமியை நம்பி அவள் பிறகே போனது போல நாமும் வசனத்தை நம்பி வசனம் சொல்லுகிறபடி, வசனத்தின் பிறகே போகும்போது ரூத்துக்கு இயேசுவின் பிறப்பில் வரிசையில் இடம் கிடைத்ததுபோல நமக்கும் நியாயத்தீர்ப்பில் இயேசுவோடு கூட இருக்கும் பரலோக பாக்யம் நிச்சயம் கிடைக்கும்.

வசனம் நமக்கு எதை செய்யும்படி சொல்கிறது? ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான். ஜலம் என்பது தண்ணீர். ஆவியின்படி என்பது வசனத்தின்படி (யோ. 6:63) வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2 தீமோ. 3:16,17).

மறுபடியும் பிறப்பது என்பது இரட்சிப்படைவது. இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? (அப். 16:30). முதலாவது வசனத்தை கேள்விப்பட வேண்டும். **(ரோமர் 10:17)** இரண்டாவது விசுவாசிக்க வேண்டும் **மாற்கு (16:15,16)** மூன்றாவது மனந்திரும்ப வேண்டடம். (அப். 2:38). நான்காவது அறிக்கையிட வேண்டும். (அப். 8:37). ஐந்தாவது ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். (அப். 2:38. அப். 22:16).

வேத வசனம் இவ்வாறு சொல்கிறபடியால், ரூத்தைப் போல கண்ணை மூடிக் கொண்டு இதை நம்புவோம். இதன்படி செய்வோம். அப்போது புதிய ஏற்பாட்டில் உள்ள, உண்மையான, ஒரே சபையாகிய, கிறிஸ்து கட்டின கிறிஸ்துவின் சபையில் (ரோமர் 16:16) அங்கமாவோம் உன்னத நிலையான பரலோகத்தை சுதந்தரிப்போம்.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, இப்புதிய ஆண்டில் இந்த காரியங்களை படித்து, ஏதோ புதுமையென்று எண்ணாமல், ரூத்தை போல தாழ்த்தி, அந்நிய காரியமாக இருந்தாலும், தன் காரியமாக மாற்றி உறுதியாய் நின்று செயல்பட்டது போல இப்புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும் போது பூரண சமாதானமும், பூரண பலனும் கிடைக்கும். ஏசாயா தீர்க்கன் கூறும்போது, **உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன், உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்** (ஏசாயா 26:3). என்கிறார்.

எனவே, பூரண சமாதானத்தைப் பெற வாஞ்சிக்கும் ஒவ்வொருவரும் இந்த புதிய ஆண்டு, புதிய ஏற்பாட்டு வசனத்துக்கு நம்மை கீழ்ப்படுத்து வோம். ரூத்தைப் போன்று ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்தாலும். அவள் உன்னத நிலையை அடைந்தது போல நாமும் பரலோக பாக்யத்தை பெற்றுக் கொள்வோம். ஆமென்.

**ரேச்சல் ராஜநாயகம்**

# இரட்சிப்பின் மேன்மை

**வா**லிப நெஞ்சங்களே! உங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தி வரவேற்கிறேன். உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு கூட உங்களை இந்தக் கட்டுரை வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த உலகத்தில் இரட்சிப்பை விட முக்கியமானது ஒன்றுமில்லை. 1தெசலோனிக்கேயர் 5:9ல் "தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதெற்கென்று நியமித்தார்" என்று வாசிக்கிறோம். நாம் இரட்சிக்கப்படுவதற் கென்று நியமிக்கப்பட்டிருக்கிறோம். எனவே, நாம் இரட்சிக்கப்படாமல் மரித்துப் போனால் நாம் இந்த உலகத்தில் வாழ்வதற்கான நோக்கத்திலிருந்து தவறுகிறோம். சிலர் ஆதாமின் பாவத்தை நாம் சுமந்து கொண்டிருப்பதாகச் சொல்கின்றனர். ஆனால், அது தவறு எனக் கீழ்க்காணும் வசனங்கள் தெளிவாக்குகின்றன.

1. "எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:12) இந்த வசனத்தில் அவர்கள் எப்படிப் பிறந்தார்கள் என்று சொல்லப்படவில்லை, மாறாக அவர்களுடைய நிலைமை விவரிக்கப்பட்டிருக்கிறது.

2. பாவஞ்செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (1 யோவான் 3:4); "ஆதலால் ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக்கோபு 4:17). பாவம் என்ன என்பதை இந்த வசனங்கள் விளக்குவதால் ஆதாமுடைய பாவத்தை நாம் சுமப்பதில்லை.

3. இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத்திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது என்று பிரசங்கி 12:7ல் வாசிக்கிறோம். நம்முடைய பெற்றோரிடமிருந்து ஆவியை நாம் பெற்றுக் கொள்ளாதபடியால் நம்முடைய முன்னோர்களுடைய பாவத்தை நாம் சுமப்பதில்லை. அதாவது, ஆதாமுடைய பாவத்தை நாம் சுமப்பதில்லை. ஒவ்வொருவருடைய கிரியைகளுக்கும் அவர்கள் பொறுப்பு, அதற்கான தக்க பலனை அடைவார்கள் என வேதம் சொல்கிறது. (2 கொரிந்தியர் 5:10). நாம் பாவத்தை சுமக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், மற்றவர்களுடைய பாவத்தை அல்ல நம்முடையப் பாவத்தை நாம் சுமக்கிறோம். நம்முடைய பாவமே நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது மற்றவர்களுடைய பாவமல்ல, (ஏசாயா 59:2; ரோமர் 3:23; 1 யோவான் 1:8-10).

நிச்சயமாகவே, ஆதாமுடைய பாவத்தின் விளைவுகளை நாம் அனுபவிக்கிறோம். ஆனால், ஆதாமுடைய பாவத்தை நாம் சுமப்பதில்லை. உதாரணமாக ஒரு ஓட்டுநர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டி அப்பாவி

மக்களை கொன்று விட்டான் என்றால் அந்த அப்பாவி மக்கள் எந்த பாவத்தையும் செய்யவில்லை அந்த வாகன ஓட்டுநரின் பாவத்தின் விளைவை இந்த அப்பாவி மக்கள் அனுபவிக்கிறார்கள். ஒரு தேசத்தின் தலைவரை சில தீவிரவாதிகள் சுட்டுக் கொன்று விட்டால் மொத்த தேசமும் அவதிப்படும், ஆனால் குற்றத்தை தேசத்து மக்கள் சுமப்பதில்லை. ஆனால் விளைவுகளை சந்திப்பார்கள் அல்லது அனுபவிப்பார்கள்.

ஆதாமின் பாவத்தினால் நாம் சரீர மரணத்தை சந்திக்கிறோம். இது ஆதாமின் பாவத்தின் விளைவுகளுள் ஒன்றாகும். ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1கொரிந்தியர் 15:22) மரணமானது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27) சரி, இப்போது நாம் இரட்சிப்பைப் பற்றி சில காரியங்களைப் பார்ப்போம். வேதாகமத்தில் குறிப்பாக புதிய ஏற்பாட்டில் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:37)ல் யூதர்கள் பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று ஒரு கேள்விக்கேட்டார்கள். பேதுரு செய்த பிரசங்கத்தால் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இதே கேள்வியை இன்றைய நாட்களில் அநேகர் கேட்கிறார்கள். இது ஒரு நல்ல கேள்வி. உதாரணமாக, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர் எதாவது செய்ய வேண்டும் அவருடைய பங்கு அதில் இருக்கிறது என்பது நமக்குத் தெளிவாகிறது. அதை அவர்தான் செய்ய வேண்டும் அவருக்காக வேறுயாரும் செய்ய முடியாது என்பது திண்ணமாகும். நாம் இரட்சிக்கப்பட எதையும் செய்ய வேண்டியதில்லை யென்றால் எல்லோருமே இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள். எனவே, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுடைய பங்கும் இருக்கிறது. தேவனுடைய பங்கும் இருக்கிறது. அதாவது நாம் இரட்சிக்கப்படுவதற்கு சில காரியங்களை நாமே செய்து கொள்ள முடியாது. அதை தேவன் தாமே நமக்காக செய்வார். சரி, இப்போது இரட்சிப்பில் தேவனுடைய பங்கு என்ன என்பதையும் மனிதனுடைய பங்கு என்ன என்பதையும் வசன ஆதாரங்களுடன் ஆராய்வோம்.

## I <u>தேவனுடைய பங்கு</u>

1. நாம் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம் (எபேசியர் 2:89)
2. நாம் தேவனுடைய இரக்கத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் (தீத்து. 3:5)
3. நாம் தேவனுடைய அன்பினாலே இரட்சிக்கப்படுகிறோம் (யோவான் 3:16)
4. நாம் சுவிசேஷத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் (ரோமர் 1:16)
5. நாம் இரத்தத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் (வெளி. 1:6)
6. நாம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலே இரட்சிக்கப்படுகிறோம் (1கொரிந்தியர் 15:1-4).

## II மனிதனுடைய பங்கு

1. நாம் நம்முடைய விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் (எபிரெயர் 11:6)

2. நாம் நம்முடைய மனந்திரும்புதலினாலே இரட்சிக்கப்படுகிறோம் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:30)

3. நாம் நம்முடைய அறிக்கையினாலே இரட்சிக்கப்படுகிறோம் (மத்தேயு 10:32)

4. நாம் பெறுகின்ற ஞானஸ்நானத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21)

5. நாம் நம்முடைய கீழ்ப்படிதலினாலே இரட்சிக்கப்படுகிறோம் (மத்தேயு 7:21; எபிரெயர் 5:89)

6. நாம் நம்முடைய கிரியைகளினாலே இரட்சிக்கப்படுகிறோம் (யாக்கோபு 2:24)

## III சிலுவைக்கு முன்பும், பின்பும் இரட்சிப்பு

வரலாற்றை இரண்டாகப் பிரிக்கும் கோடு சிலுவை. பழையப் பிரமாணமாகிய மோசேயின் நியாயப் பிரமாணம் இந்த சிலுவையின் மேல் தான் ஆணியடிக்கப்பட்டது. இயேசுவே அதை சிலுவையின் மேல் ஆணியடித்தார் (கொலோசெயர் 2:14). பழைய பிரமாணத்தை இப்போது நாம் பின்பற்றினால், நியாயப் பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறோம் (கலாத்தியர் 5:3,4) இதில் மிருக பலிகள், வருடத்திற்கு மூன்று முறை வரும் மூன்று பண்டிகைகளுக்கு எருசலேமுக்கு செல்லுதல், நியாயப்பிரமாணத்தை மீறுவதினால் கிடைக்கும் தண்டனைகள் ஆகியவைகள் உள்ளடக்கம். தேவன் இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கப்போட்டார், அதினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

### சிலுவைக்குப் முன்பு :-

இயேசு சகேயுவை நோக்கி "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே" என்று சொன்னார் (லூக்கா 19:9).

நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்து கொண்டு இயேசுவினிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக் காரனை நோக்கி; மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது என்றார் (மாற்கு 2:35).

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கள்வனைப் பார்த்து, இயேசு "நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்" என்று சொன்னார் (லூக்கா 23:43).

இவைகள் எல்லாம் சிலுவைக்கு முன்பு இரட்சிப்பின் சில உதாரணங்கள் இவைகளெல்லாம் இரட்சிப்பிற்காக நாம் பின்பற்ற வேண்டிய உதாரணங்கள் அல்ல, ஏனென்றால் இவைகளெல்லாம் வித்தியாசமான பிரமாணத்தின் கீழ் வித்தியாசமான காலக்கட்டத்தில் நடைபெற்ற சம்பவங்கள். ஆனால், இவைகள் புதிய பிரமாணத்தின் கீழ் வாழும் நமக்கு அதாவது நாம் இரட்சிக்கப்படுவதற்குப் பொருந்தாது.

## சிலுவைக்குப் பின்பு :-

அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்திலிருந்து கிறிஸ்தவ காலம் தொடங்குகிறது. இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் முதன் முறையாக இரட்சிக்கப்படுவதின் நிபந்தனைகளை அறிவித்தனர். இந்த இரட்சிப்பின் நிபந்தனைகளுக்குட்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தரால் சேர்க்கப்பட்டும் வருகின்றனர். எனவே, பிரியமான வாலிப நெஞ்சங்களே இவ்வளவு அருமையான இரட்சிப்பை நீங்கள் ருசிக்காமல் இருக்கிறீர்களா? நம்முடைய அன்பின் தேவன் இரட்சிப்பின் திட்டத்தை மனிதன் செய்யத்தக்க வகையில்தான் மிக சுலபமாக நீட்டியிருக்கிறார். இதை நாம் அற்பமாக எண்ண வேண்டாம். இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறாமல் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுகாறும் அப்படி தொலைத்தது போதும், இனியாவது இரட்சிப்பின் மேன்மையை உணர்ந்து இரட்சிக்கப்பட்டு, கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு தேவ ஆசீர்வாதங்களைப் பெற நீங்கள் ஆயத்தமா? அப்படியென்றால் நீங்கள் இரட்சிக்கப்பட செய்ய வேண்டியது:-

1. சத்தியமாகிய வசனத்தை கேள்விப்பட வேண்டும் (ரோமர் 10:14,17)

2. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 16:16; யோவான் 8:24)

3. நம்முடைய பாவங்களிலிந்து மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3; அப். 2:38)

4. மனுஷருக்கு முன்பாக கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும் (மத்தேயு 10:23,33; ரோமர் 10:10)

5. நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும். (காலத்தியர் 3:27; 1 பேதுரு 3:21)

*பென்னி மார்ட்டின்*

## எல்லாம் புதிதாயின

| | | |
|---|---|---|
| II கொரி 5:17 | - | கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டி |
| ரோமர் 6:4 | - | கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன் |
| எபி 8:8 | - | கிறிஸ்துவுக்குள் புதிய உடன்படிக்கை |
| மாற் 1:27 | - | கிறிஸ்துவுக்குள் புதிய உபதேசம் |
| எபே 4:24 | - | கிறிஸ்துவுக்குள் புதிய மனுஷன் |

# நல்லவனாக மாறிய மோசமான ராஜா

சிறுவர் பகுதி

எனதருமை சிறுதம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இம்மாதமும் உங்களோடு கூட தேவனுடைய காரியங்களை கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த சிறுவர் பகுதி மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளும் காரியங்கள் உபயோகமாகவே இருக்கும் என நம்புகிறேன்.

சரி, இம்மாதம் எருசலேமை ஆண்ட ராஜாவிடமிருந்து சில பாடங்களை கற்றுக்கொள்ளப் போகிறோம்.

எருசலேமை ஆண்ட ராஜாக்களிலே மிகவும் துன்மார்க்கமானவன் மனாசே என்ற பெயருடைய ராஜா. அவன் அப்பா பெயர் எசேக்கியா. இவரோ தான் ஆண்ட போது பல நல்ல காரியங்களைச் செய்து ஒன்றான மெய் தேவனை மட்டும் சேவித்து கொண்டு வந்தார். ஆனால், இவர் பிள்ளையாகிய மனாசேயோ தன் தகப்பனிடமிருந்து ஒன்றையும் கற்றுக் கொள்ளாமல் ஒரு துன்மார்க்க ராஜாவாக இருந்து வந்தான்.

இவனுடைய துன்மார்க்கத்தின் விளைவாக என்ன ஆனது தெரியுமா? தேசத்திலே தேவனை சேவித்து வந்த ஜனங்களும், அவரை விட்டு விலகும் அளவுக்கு இவன் துன்மார்க்க காரியங்களை செய்து வந்தான். சரி, துன்மார்க்கன் என்று சொல்கிறோமே! அப்படி என்ன தான் அவன் செய்தான்? தொடர்ந்து படியுங்கள்.

அவன் தேவனை விட்டு விலகியிருந்தால் மட்டும் பரவாயில்லையே! அவன் என்ன செய்தான் தெரியுமா? அந்நிய தேவர்களுக்கு சிலைகளையும், பலிபீடங்களையும் கட்டி சாலமோன் தேவனுக்காக கட்டின ஆலயத்திலே அந்த சிலையை நிறுத்தினானாம் பாருங்கள்! இவன் துன்மார்க்கன் தானே? மேலும், அந்த அந்நிய தேவர்களுக்கு பலியாகவும், சடங்கா சாரங்களுக் காகவும் அவனுடைய சொந்த பிள்ளைகளையே பலியாக கொடுத் திருக்கிறான். இப்பொழுது நான் சொல்ல தேவையில்லை. நீங்களே இவனை துன்மார்க்கன் என்பீர்கள்!

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை கானானுக்குள்ளாக வழி நடத்தி வந்த போது சில நாடுகளை அழித்துப் போட்டாரல்லவா? அந்த நாடுகளைக் காட்டிலும் துன்மார்க்கம் நிறைந்த நாடாய், இந்த மனாசேயின் நாடு இருந்தது.

சரி, இதையெல்லாம் பார்த்த தேவன் அவனுடைய துன்மார்க்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்தார். என்ன செய்தார்? தொடர்ந்து படியுங்கள்.



அசீரியர்களை மனாசேவுக்கும், அவன் ஆண்ட தேசமாகிய யூதாவுக்கும் விரோதமாக எழும்பி, அவர்களை தோற்கடித்தார். மனாசேயை சங்கிலிகளினால் கட்டி பாபிலோனுக்கு இழுத்துச் சென்றார்கள்.

பாபிலேனில் இருந்தபோது தான் அவனுக்கு புத்தி வந்தது. அவன் தான் செய்த பாவங்களை உணர்ந்து;பார்த்தான். "இப்படி அவன் நெருக்கப்படுகையில், தான் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சி, தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான். அவரை நோக்கி, அவன் விண்ணப்பம் பண்ணிக் கொண்டிருக்கிறபோது, அவர் அவன் கெஞ்சுதலுக்கு இறங்கி, அவன் ஜெபத்தைக் கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணினார்; கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்தான்" (2நாளா 33:12-13).



அவன் மனந்திரும்பி பாவங்களுக்காக வருத்தப் பட்டான். அதோடு அவன் எருசலேமுக்கு திரும்பின போது அவன் உண்டாக்கின அந்நிய தேவர்களின் சிலைகளையும், பலிபீடங்களையும் அகற்றி, அவற்றை தேசத்துக்கு புறம்பே வீசினான். அவன் தேவனுடைய பலிபீடத்தை சரி செய்து சமாதான பலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் செலுத்தி இஸ்ரவேலின் தேவனை சேவிக்க ஆரம்பித்தான் (2 நாளா 13:15-16).

ஆக, தன்னுடைய வழிகளில் இருந்த துன்மார்க்கத்தை உணர்ந்து அறிந்து தேவனிடத்தில் திரும்பினான் மனாசே. பாருங்கள் நம் தேவனுடைய இரக்கத்தை! நம் தேவன் மிகுந்த இரக்கமுள்ளவர். நாம் ஏதாவது தவறு செய்து, தேவனிடம் மீண்டுமாக திரும் பினால் அவர் நம்மை ஏற்றுக் கொள்ள அவர் இரக்கமுள்ள வராயிருக்கிறார்.

இந்த புதுவருடத்தில் நமக்கு கிடைக்கும் முக்கியமான பாடம் என்னவென்றால் "தேவனுக்கு கீழ்ப்படிந்தால் அவர் நம்மை ஆசீர்வதிப்பார்". "தேவனுக்கு விரோதமாக காரியங்களை செய்தால் நம்மை தண்டிப்பார்" இதற்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை.

**R.A.R. NAYAGAM**

# விசுவாசத்தின் அடிப்படைகள் தொடர்

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க கூடின போது என்ன செய்தார்கள் என்பதை நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம். இது தான் மனிதர்கள் அநேக வடருங்களாக உருவாக்கியிருந்த மத குழுவிலிருந்து இயேசுக் கட்டின ஒன்றான மெய் சபையை வித்தியாசப் படுத்தும் தேவனுடைய மாதிரியின் பகுதியாகும்.

அந்தக் கிறிஸ்தவர்கள் கீழ்க்காணும் காரியங்களை செய்ததாக நம்முடைய பாடம் வெளிப்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தருடைய பந்தியை அனுசரித்தார்கள். ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவனை ஆராதிக்க ஒன்றாய் கூடிவந்த போது கர்த்தருடைய பணி செய்யப்படும்படி கர்த்தருக்கென்று காணிக்கைக் கொடுத்தார்கள்.

அவர்கள் தேவனிடத்தில் ஜெபித்தார்கள்.

அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தார்கள், படித்தார்கள்.

தேவனை ஆராதிக்க இயேசுவின் ஆதி சீஷர்கள் கூடி வந்த போது அவர்கள் செய்த ஐந்தாவது காரியத்தை நாம் பார்ப்போம்.

அவர்கள் ஆவிக்குரிய பாடல்களைப் பாடினார்கள். ஆராதனையின் இந்தப் பங்கை நாம் படிக்கும் போது, சில அடிப்படை விதிகளுடன் நாம் தொடங்குவோம்.

முதலாவது, உபாகமம் 4:2; 12:32; நீதிமொழிகள் 30:6; கலாத்தியர் 1:6-10; வெளிப்படுத்தின விசேஷம் 22:18,19 போன்ற வசனங்களில் எவ்விதத்திலும் தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் எதையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது எனத் தேவன் நமக்கு கட்டளையிடுகிறதை நாம் பார்த்திருக்கிறோம்.

இரண்டாவது ரோமர் 7:4-7; கொலோசெயர் 2:13-17; எபிரெயர் 8:6-13; எபிரெயர் 10:8-10 போன்ற வசனங்கள் இன்றைய நாட்களில் நாம் நினைப்பதற்கும், சொல்வதற்கும், செய்வதற்கும் அதிகாரத்தை நிலை நாட்ட பழைய ஏற்பாட்டிற்கு அல்ல புதிய ஏற்பாட்டிற்கே செல்ல வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

மூன்றாவது, நாம் ஏற்கனவேப் படித்தபடி தேவன் ஆராதனையைப் பற்றி சொல்கின்ற சில காரியங்களை நாம் மறுபடியும் பார்க்க வேண்டும்.

இயேசு நாம் தேவனை ஆவியோடும் (உண்மையான, கவனமுள்ள இருதயத்தோடு) உண்மையோடும் (புதிய ஏற்பாட்டின்படி) தொழுது கொள்ள வேண்டும் என்று சொன்னார் (யோவான் 4:23,24). நாம் எதைச் செய்தாலும் இயேசுவின் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற படியே இயேசுவின் நாமத்தினாலே (அதிகாரத்தினாலே) செய்ய வேண்டும். புதிய ஏற்பாடு அல்லாமல் மனுஷருடைய கற்பனைகளின்படியே நாம் தேவனை ஆராதிக்கும் போது பொய்யான ஆராதனைச் செய்யும் குற்றச்

சாட்டுக்குள்ளாகிறோம். மேலும், அது நம்முடைய ஆராதனையை வீணான ஆராதனையாக்குகிறது என்று இயேசு சொன்னார். (மத்தேயு 15:7-9).

இப்போது, நாம் தேவனை ஆராதிக்கும் போது அவர் கட்டளையிடுகிற இசை வகையை நாம் ஆராய்வோம்.

புதிய ஏற்பாட்டில், இசை சம்பந்தமாக தேவன் நமக்கு மூன்று காரியங்களை கட்டளையிட்டிருக்க முடியும்.

முதலாவது, தேவன், பியானோ, ஆர்கன் போன்ற இசைக்கருவிகளை மட்டும் பயன்படுத்த கட்டளையிட்டிருக்கலாம்.

இரண்டாவது, இப்படிப்பட்ட இசைக்கருவிகளுடன் நாம் பாடல்கள் பாடவும் கட்டளையிட்டிருக்கலாம். தேவன் இசைக்கருவிகளோடு பாடல்கள் பாடுவதின் பயன்பாட்டை விவரிக்க நன்கு அறிந்திருந்தார் என்பதை நன்றாகக் கவனியுங்கள்.

சங்கீதம் 98:5யை நாம் வாசிக்கும் போது இங்கே தாவீது சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவதைக் குறித்துப் பேசுகிறார். நாம் இன்று தேவனை ஆராதிப்பதைத் தீர்மானிப்பதற்கு பழைய ஏற்பாட்டிற்கு செல்ல வேண்டியதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் புதிய ஏற்பாட்டிற்கு செல்ல வேண்டும். எனவே, இந்த வசனம் நம்முடைய பாடல்களோடு இசைக்கருவிகளைப் பயன்படுத்த அதிகாரம் நமக்கு தருவதில்லை. இந்த வசனம், சுரமண்டலம் போன்ற இசைக் கருவி களுடன் பாடல்கள் பாடும் பழக்கத்தை விவரிக்க தேவன் அறிந்திருக்கிறார் என்பதை நமக்குக் காட்டுகிறது.

1நாளாகமம் 15:16யை வாசியுங்கள் இந்த வசனத்தில் பாடகர்களின் குரல்கள் தம்புரு சுரமண்டலம் கைத்தாள முதலிய கீதவாத்தியங்களோடு சேர்ந்திருப்பதை நாம் வாசிக்கிறோம். இது இன்றைய நாட்களில் நாம் ஆவிக்குரிய பாடல்களைப்பாடும்போது மேலே குறிப்பிடப்பட்ட இசைக் கருவிகளை பயன்படுத்த நமக்கு அதிகாரம் கொடுப்பதில்லை. ஆனால், இது பழைய ஏற்பாட்டில் இசைக்கருவிகளுடன் பாடல்கள் பாடும் முறைமையை தேவன் விவரித்திருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது.

தேவன் பழைய ஏற்பாட்டு காலங்களில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தி பாடல்களைப் பாட தம்முடைய தாசர்கள் மூலமாக வெளிப் படுத்தியிருந்தால் தம்முடைய அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் மூலமாக புதிய ஏற்பாட்டை வெளிப்படுத்தின தேவன் இசைக்கருவிகளுடன் பாடல் களைப் பாடலாம் என்று சொல்லியிருப்பார் அல்லவா? அப்படி சொல்ல வில்லையே எனவே சொல்லாத அல்லது கட்டளையிடாத ஒன்றை நாம் ஏன் செய்ய வேண்டும்?.

மூன்றாவது, தேவன் பாடல்கள் பாடுவதை மாத்திரம் கட்டளை யிட்டிருக்க முடியும்.

கேள்வி என்னவென்றால், இந்த மூன்றில் (இசைக்கருவிகள் மாத்திரம், இசைக்கருவிகள் பயன்படுத்தி பாடல்கள் பாடுவது, அல்லது பாடல்கள் மாத்திரம்) தேவன் புதிய ஏற்பாட்டில் எதைக் கட்டளையிட்டிருக்கிறார்?

கொலோசெயர் 3:17யை நினைவில் கொள்ளுங்கள் நாம் எதைச் செய்தாலும் கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே செய்யவேண்டும் என்று தேவன் சொல்கிறார் கிறிஸ்துவின் அதிகாரம் அவருடைய புதிய ஏற்பாட்டில் இருக்கிறது.

பின்பு, இங்கே ஒரு முக்கியமான கேள்வி இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இந்த பூமியில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தி பாடல்களைப் பாடினார்கள் என்பதற்கான வசன ஆதாரத்தை நாம் எங்கே காண முடியும்? அந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்காக என்னுடன் கீழ்காணும் வசனங்களை மிக ஜாக்கிரதையாக வாசியுங்கள்.

மத்தேயு 26:30 நம்முடைய பிரியமான எஜமானின் சமூகத்தில் அவருடைய சீஷர்கள் ஸ்தோத்திர பாடலைப்பாடினார்கள்.

மாற்கு 14:26 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப்பாடினார்கள். அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:25, பவுலும், சீலாவும் தேவனைத் துதித்துப் பாடினார்கள்.

ரோமர் 15:9 இங்கே பாடல் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

1கொரிந்தியர் 14:15 நாம் ஆவியோடும் (நம்முடைய உள்ளார்ந்த மனிதன்) கருத்தோடும் பாடவேண்டும்.

எபேசியர் 5:19யை நாம் வாசிக்கும் போது நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் நாம் தேவனை ஆராதிக்க ஒன்று கூடும் போது பாடும் பாடலைப் பற்றி அவர் தெளிவாகக் கூறுகிறார். நாம் ஒருவருக்கொருவர் இந்த ஞானப் பாட்டுகளினால் புத்தி சொல்ல வேண்டும்.

கொலோசெயர் 3:16யை நாம் வாசிக்கும் போது நம்முடைய இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாட வேண்டும், மறுபடியும் இது ஒரு ஆராதனை ஒழுங்கு என்பது தெளிவாகிறது. இந்த ஞானப்பாட்டுகளினால் நாம் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்ல வேண்டும் என்ற உண்மையினால் நாம் இதை அறிகிறோம்.

எபிரெயர் 2:12யை வாசியுங்கள் இங்கே தேவனைத் துதித்துப்பாடுதல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யாக்கோபு 5:13யை வாசிக்கும் போது இந்த வசனத்தில் ஒன்றாய்க் கூடி வரும் சபையல்லாமல் தனிமனிதனைப் பற்றிப்பேசுகிறார். ஆனால் புத்திமதி ஒன்றேயாகும். நாம் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாட வேண்டும் என்று தேவன் சொல்கிறார்.

எங்களுடைய அறிவுக்கெட்டினபடி இந்த பூமியில் இசையைப் பற்றி தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற (புதிய ஏற்பாட்டில்) வசனங்கள் இவ்வளவு தான். உங்களுக்கு வேறு ஏதேனும் வசனங்கள் தெரிந்திருந்தால் அந்த வசனங்கள் எங்கே இருக்கிறது என எங்களோடு தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

பிரியமானவர்களே, இந்த வசனங்களில் இயேசு நம் ஒவ்வொருவருக்கும் என்ன அதிகாரத்தை கொடுத்திருக்கிறார்? நம்முடைய அருமை இரட்சகர் நாம் அவரிடமிருந்து ஞானப்பாடல்களைப் பாடவே அதிகாரம் பெற்றிருக்கிறோம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்!.

இந்த வசனங்களில் தேவனை ஆராதிக்கும் போது சுரமண்டலம் போன்ற இசைக் கருவிகளை ஞானப்பாடல்களைப் பாடும்போது பயன்படுத்த அதிகாரத்தை இயேசு நமக்குக் கொடுத்திருக்கிறாரா? பிரியமான நண்பர்களே, இப்படிப்பட்ட இசைக்கருவிகளை பயன்படுத்த கர்த்தர் குறிப்பிடவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். தேவன் பழைய ஏற்பாட்டில் இசைக் கருவிகளை தேவனைத் துதித்துப்பாடும் போது பயன்படுத்த அனுமதித் திருந்தார்.

இப்படியிருக்க, ஞானப்பாட்டுகளைப் பாடும்போது இசைக் கருவிகளைப் பயன்படுத்த மக்களுக்கு அதிகாரம் எங்கே இருந்து கிடைத்தது? அவர்களுக்கு இயேசுவினிடத்திலிருந்து அதிகாரம் இல்லாததால் தேவன் கட்டளையிட்டவைகளோடு மனுஷ போதனைகளையும், உபதேசங்களையும் கூட்டுகிறார்கள். இதுபாவமாகும்! நாம் ஏற்கனவே பார்த்தபடி இது அவர்களுடைய ஆராதனையை வீணான ஆதாரானையாக்குகிறது. நிச்சயமாகவே இது நித்திய முக்கியமான பிரச்சினையாகும்.

இந்த காரணத்திற்காக, ஞானப்பாட்டுகளை பாடும்போது இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் எந்த நபரோடும், சபைக்கும் எங்களுடைய பணிவுள்ள, அன்புள்ள வேண்டுகோள் என்னவென்றால் இந்த பாவமான காரியத்திலிருந்து மனந்திரும்பி இயேசு புதிய ஏற்பாட்டில் நமக்கு எதைச் செய்ய அதிகாரம் தந்திருக்கிறாரோ அதையே செய்ய உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த மாதம் ஆராதனையில் நம்முடைய பாடலின் நோக்கத்தையும், ஞானப்பாட்டுகளைப் பாடும்போது இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு சிலர் சொல்லும் காரணங்களையும் அதைக் குறித்து நம்முடைய விவாதத்தையும் பார்ப்போம்.

**BENNY CHARLIE**

## கிறிஸ்துவின் உபதேசம்

| | |
|---|---|
| யோவா 7:16, 17 | - பிதாவினால் உண்டானது |
| மத். 7:28,29 | - அதிகாரமுடையதாயிருக்கிறது |
| யோவா 7:28,29<br>யோவா 14:6 | - சத்தியமுள்ளதாயிருக்கிறது |
| அப். 2:42 | - ஆதி கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டதாயிருக்கிறது |
| 2யோவா 9-11 | - கிறிஸ்துவில் நிலைத்திருக்க செய்கிறது. |

# சபை கூடிவருவது மிக அவசியமா?

"ஆராதனையில் பங்கு பெறவேண்டியது அவ்வளவு முக்கியமான காரியமா? நமக்கு பல வேலைகள் உள்ளன; நிறைய வேலைப் பளுவின் காரணமாக அதிக களைப்பாகவும் இருக்கிறது. என்றாலும் சபை கூடிவருவது முக்கியம் என்றால் நல்லது தான்; ஆனாலும் அது எவ்வளவு முக்கியமானது என்று தெரிந்து கொள்ளலாமா?" - முற்றிலும் நேர்மையான ஒரு மனிதனின் கேள்வி இது.

**கர்த்தருக்கு அது முக்கியம்**: சபை கூடி வருவதால் ஒன்றையும் ஒருபோதும் அவர் தவற விடுவதில்லை. பிறரும் அதை தவற விடக்கூடாது என அவர் வற்புறுத்துகிறார். (மத்தேயு 18:20; எபிரெயர் 10:25).

**நீ நேசிப்பவர்களுக்கு அது முக்கியம்**: பத்து லட்சம் வார்த்தைகளை விட உன் விசுவாசமும் முன்னுதாரணமும் உரக்க ஒலிக்கின்றன. சபையை நீ நேசிப்பதை விட உன் குழந்தைகள் அதிகமாக நேசிக்காமல் இருக்கக் கூடும். எனவே, உனது முன்மாதிரியான நடவடிக்கைகள் பிறருக்கு மிகவும் அவசியமாகும்.

**உனது அயலானுக்கு அது அவசியம்**: நாம் கூறும் செய்திகளைக் காட்டிலும், நமது செயல்களே மேலோங்கி நிற்கின்றன. "வாழ்க்கை நெறி முறைகளில் அவர் எவ்வளவு உறுதியானவர்?" என்ற கேள்வியே உனது விசுவாசத்திற்கு அவர்களுடைய முதல் சோதனை.

**சபைக்கு அது அவசியம்** : கிறிஸ்தவர்கள் ஆராதனையை அலட்சியப்படுத்தி அதில் கலந்து கொள்ளாமலிருக்கும் போது சபையின் ஒவ்வொரு காரியத்திற்கும் இடைஞ்சலாகிறது. எவ்வளவு அருமையான பிரசங்கமும் உனது காலி இடத்தை அசைக்க இயலாது.

**மூப்பர்களுக்கும் ஊழியர்களுக்கும் அது முக்கியம்**: சபையை உற்சாகப்படுத்தி விசுவாசத்தில் நிலைநிறுத்த முயற்சிக்கும் இவர்களுக்கு பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவிசுவாசம் இவர்களைக் குழப்பவும் கலக்கமடையவும் செய்யும். உங்களுடைய விசுவாசமானது, வார்த்தைகளால் சொல்லும் அளவிற்கும் அதிகமாக, அவர்களின் சுமையைத் தாங்க உதவும் பெரியதோர் வித்தியாசத்தை உண்டாக்குகிறது.

**உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அது அவசியம்** : கிறிஸ்தவர்கள் என்றால் சீடர்கள், அதாவது பின்பற்றுவோர், கற்றுக்கொள்வோர், அல்லது மாணவர்கள். அடிக்கடி பள்ளிக்குச் செல்லாத மாணவன் தேர்வுகளில் தவறி விடுவது போல, ஆராதனைக்குத் தவறுவது ஆவிக்குரிய முன்னேற்றத்தையும் வெற்றியையும் தடை செய்கிறது. தேவனுக்கு அது முக்கியம்; தமது குமாரனையே தந்தருளி அக்கறை காட்டியவர், நீ எப்படி அவர் பேரில் அக்கறையுள்ளவனாக இருக்கிறாய் என்பதில் மிகவும் உணர்ச்சிமிக்கவராக இருக்கிறார் என்பதை நீ நிச்சயமாக நம்பலாம்.

நீ மனப்பூர்வமாக பங்கு பெற வேண்டியது மிகவும் அவசியம். உன் ஆத்தும நலனுக்காகவும் பிறர் அனைவரின் ஆத்தும நலன்களுக்காகவும், கிறிஸ்தவத்தின் முக்கியமான பகுதியாகிய சபை கூடிவருதலை அலட்சியப் படுத்தாதே.

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

அன்புள்ளம் கொண்ட திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புதிய ஆண்டில் நாம் அனைவரும் புதிதாகுவோம். கடந்த ஆண்டில் போலி பிஷப்புக்களால் உண்மையான கிறிஸ்தவத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த புதிய ஆண்டிலும் நாம் அனைவரும் கிறிஸ்துவுக்காக வாழுவோம். நம்மிடையே **"இரத்த சாட்சிகள்"** தோன்றும் வண்ணமாக நாம் பாரெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்க அறை கூவல் விடுவோமாக!.

**"இரத்த சாட்சிகள்"** என்ற இத்தொடர் அப்போஸ்தலர்களின் தியாக மரணங்களைக் கொண்டதாக இருக்கும். இவைகளின் மூலமாக நம்முடைய விசுவாச வாழ்க்கையும், நம்முடைய அர்ப்பணிப்பும், ஒப்புக் கொடுத்தலும் பலப்படவும் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தேவன் இந்த உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்தார். மனிதர்களாகிய நம்மை ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி யிருக்கிறார். சகல சிருஷ்டிகளிலும் மனிதனே விசேஷித்தவனாக இருக்கின்றான். ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவைகளால் சிருஷ்டிக்கப்பட்டி ருக்கிறான். ஆத்தும இரட்சிப்புக்காகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். நாம் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். இந்த இரட்சிப்பின் வழியை அப்போஸ் தலர்கள் அறிவித்தனர் அதனால் வந்த உபத்திரவம், பாடுகள் இவைகளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு இரத்த சாட்சிகளாய் மரித்தனர். அப்போஸ் தலர்கள் எப்படித் தங்களை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார்கள் என்பதையும், எந்த இடத்தில் இரத்த சாட்சிகளாய் மரித்தனர் என்பதையும் சில சரித்திர ஆதாரத்தோடு ஆராய்வோம்.

## அப்போஸ்தலரின் பெயர்கள் (மத். 10:1-4) (அப். 1:26, அப். 9:11-16)

1. பேதுரு, 2. அந்திரேயா, 3. செபதேயுவின் குமாரன் யாக்கோபு, 4. யோவான், 5. பிலிப்பு, 6. பந்தொலொமேயு, 7. தோமா, 8. மத்தேயு 9. அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, 10. ததேயு, 11. சீமோன், 12. மத்தியா, 13. பவுல் என்பவர்களே.

## அப்போஸ்தலர் என்றால் என்ன?

"அப்பாஸ்றலாஸ்" என்ற கிரேக்கச் சொல்லிருந்து "அப்போஸ்தலர்" என்ற சொல் வந்தது. இது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உபயோகப்

படுத்தப்பட்டது. ஒரு அரசன் தனது ஸ்தானாதிபதியை இன்னொரு நாட்டிற்கு அனுப்பும்போது ஸ்தானாதிபதி பெற வேண்டிய மதிப்பு அரசனுக்கு உகந்ததாயிருக்கும். அதுபோலவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனது 12 சீஷர்களை அழைத்து அனுப்புகின்றார். அப்போஸ்தலர் என்றால் அனுப்பப்பட்டவர் என்று பொருள். அன்றைய நாட்களில் இயேசு கிறிஸ்துவுக்கு அநேக சீஷர்கள் இருந்தனர். (லூக்கா 10:1) எல்லாரும் அப்போஸ்தலர் அல்ல! 12 சீஷர்களே அப்போஸ்தலராக நியமிக்கப்பட்டனர் (லூக்கா 6:13)

இன்றைக்கு அப்போஸ்தலர் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் வேத வசனப்படி நியமிக்கப்படாதவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால், இயேசுகிறிஸ்து இன்று யாரையும் அப்போஸ்தலராக அழைக்கவில்லை! பவுல் ஒருவரே கடைசியாக அப்போஸ்தலராக இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர் (1கொரி. 15:3-9).

**<u>அப்போஸ்தலருக்கான தகுதிகள்</u> (அப். 1:21-22)**

1. யோவான் ஸ்நானகன் கொடுத்த மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்க வேண்டியவது அவசியமாக உள்ளது.
2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் இருந்திருக்க வேண்டியது அவசியமாக உள்ளது.
3. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கண்ணாரக் கண்டிருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த மூன்று தகுதிகளைக் கொண்டவர்களே அப்போஸ்தலராக நியமிக்கப்படுவதற்கான தகுதியாக உள்ளது. யூதாஸ் நான்று கொண்டு மரித்தான் அவனுக்குப் பிறகு அப்போஸ்தல பட்டத்திற்கு தகுதி பெற்றவர்களை ஆராய்ந்தார்கள் அன்றைய நாளிலே அப்போது தகுதி உடையவர்கள் நிறைய பேர் இல்லை இரண்டே பேர் தான் இருந்தனர் அவர்கள் யோசேப்பு, மத்தியா என்பவர்கள் அப்போஸ்தலர் எண்ணிக்கை 12 என்பதால் சீட்டுப்போட்டு ஒருவரை தேர்ந்தெடுத்தனர். சீட்டு மத்தியா பேரில் விழுந்தது அப்போது மத்திய 12வது அப்போஸ்தலராக நியமிக்கப்பட்டார். (அப். 1:25,26).

இன்றைக்கு இப்படிப்பட்ட தகுதி உடையவர்கள் ஒருவரும் இல்லை. எனவே அப்போஸ்தலர் இன்றைக்கு இல்லை. அப்படி யாராகிலும் தங்களை அப்போஸ்தலர் என அழைத்துக் கொண்டால் அது கள்ள அப்போஸ்தலனே! கள்ள அப்போஸ்தலன் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்க முடியாது.

இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக அப்போஸ்தலர் மட்டுமே! இயேசு கிறிஸ்து நீங்களே ..... எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப். 1:8).

யூதாஸ்க்கு பதிலாக ஏற்படுத்தப்படும்போது பேதுரு எங்களுடனே கூட சாட்சிகளாக ஏற்படுத்த வேண்டும் என்றார் (அப். 1:22) பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கிக்கும் போது நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் (அப். 2:32) என்று குறிப்பிடுகிறார். மேலும் அப். 13:15, 5:32, 10:34-41, 1 கொரி 15:5 ஆகிய வசனங்களில் அப்போஸ்தலரே கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக இருந்தனர். ஏனென்றால் அப்போஸ்தலர்கள் மட்டுமே இயேசு கிறிஸ்துவை நேரிடையாகப் பார்த்தவர்கள், அவரைத் தொட்டவர்கள்,

அவரோடு கூட உண்டு, உறங்கி சஞ்சரித்தவர்கள். நாம் இன்றைக்கு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி சொல்ல முடியாது. ஏனென்றால், நாம் அவரை காணவில்லை, தரிசிப்பது இல்லை. நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் (2கொரி 5:6) மேலும் பேதுரு எழுதும் போது அவரை நீங்கள் காணாமல் இருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள் இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர் களாய் களி கூர்ந்து உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள் (1பேது 1:8,9) என்றார். எனவே கிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலர் பலமாய் சாட்சி கூறின வார்த்தைகள் அடங்கிய புதிய ஏற்பாடு நம்மிடம் உள்ளது. அப்போஸ்தலர்கள் உரைத்த வசனங்கள் யாவும் பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டவைகள். எனவே இந்த வசனங்களை நாம் கவனமாக படித்து பிறருக்குச் சொன்னால் அதுவே போதுமானது. எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணாமல் இருப்போம். (1கொரி 4:6).


அடுத்த இதழில் ஒவ்வொரு அப்போஸ்தலர்களின் இரத்த சாட்சிகளை படிப்போம்.

(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை, கோவை.**

## ரோமர் ஐந்தாம் அதிகாரத்தில்
## கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஆசீர்வாதங்கள்


1. தேவனிடத்தில் சமாதானம் (வசனம் 1)
2. கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம் (வச 2)
3. தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கை (வச 2)
4. உபத்திரவங்களில் மேன்மை (வச 4)
5. உன்னதமான நம்பிக்கை (வச 5)
6. தேவனுடைய அன்பு (வச 8)
7. தேவனோடு ஒப்புரவாகுதல் (வச 10)
8. கிருபையினால் வரும் ஈவு (வச 15)
9. நித்திய ஜீவன் (வச 17)
10. நீதிமானாக்கப்படுதல் (வச 19)



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## TV PROGRAM




Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்
# ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**குறைந்தது எட்டாம் வகுப்பு படித்திருக்க வேண்டும்**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு: எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

## திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




தமிழன் TV சனி காலை 7.15 - 7.30

தமிழன் TV ஞாயிறு இரவு 9.45 - 10.00

SS மியூசிக் TV திங்கள் காலை 7.00 - 7.15

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555